# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 36/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முத்துக்குமார் **Rw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of July 2025.

**முதல் விசாரணை**

நான் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 1 ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது TN-43-B-3893 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீடு பத்திரம் நிபந்தனையுடன் கூடிய உண்மை நகல் **எ.ம.சா.ஆ.5** ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து சம்பந்தமான களப்பணியாளர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கை எங்கள் நிறுவனத்திற்கு எதிராக உள்ளது என்றும், எனவே வேண்டுமென்றே அதனை தாக்கல்செய்யாமல் தவிர்த்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட TN–76–AX–5820 வாகனம் இருசக்கர வாகனம் என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட TN–43–B–3893 பதிவெண் கொண்ட வாகனம் இலகுரக வாகனம் என்றால் சரிதான். 1ம்எதிர்மனுதாரருக்கு இலகுரக வாகனம் ஓட்டுவதற்குரிய ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும், வாகனத்திற்கு முறையான தகுதிச்சான்றும் உள்ளது என்றால் சரியல்ல, அந்த வாகனத்திற்கு Permit ம் கிடையாது. இழப்பீடு கொடுப்பதிலிருந்து தவிர்ப்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi